ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1949/39 - 2016 ජනවාරි මස 14 වැනි බ්‍රහස්පතින්දා - 2016.01.14

*1949/39 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு சனவரி மாதம் 14 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி IV (அ) - மாகாண சபைகள்

## மாகாண சபை அறிவித்தல்கள்

**வடமேல் மாகாண மாகாண சபை**

*1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபை (விளைவாந்தன்மையான ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆவது பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் நகர சபை கட்டளைச் சட்டத்தின் 247 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

வடமேல் மாகாணத்தின் முதலமைச்சர் மற்றும் நிதி, திட்டமிடல், பொறியியல் சேவைகள், சட்டமும் ஒழுங்கும், உள்ளூராட்சி, மாகாண நிர்வாகம், பொருளியல் மேம்பாடு, மின் வலு, சுற்றாடல் விவகார, நீர் வழங்கல், வடிகாலமைப்பு மற்றும் சுற்றுலாத்துறை விவகார அமைச்சர் தர்மசிறி தசநாயக்க ஆகிய நான், 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, மாகாண சபை (விளைவாந்தன்மையான ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் நகர சபை கட்டளைச் சட்டத்தின் (255 ஆம் அத்தியாயம்) 247 ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க பின்வரும் கட்டளையை இத்தால் அறிவிக்கின்றேன்.

தர்மசிறி தசநாயக்க,<br>முதலமைச்சர் மற்றும் நிதி, திட்டமிடல், பொறியியல் சேவைகள்,<br>சட்டமும் ஒழுங்கும், உள்ளூராட்சி, மாகாண நிர்வாகம்,<br>பொருளியல் மேம்பாடு, மின் வலு, சுற்றாடல் விவகார, நீர் வழங்கல்,<br>வடிகாலமைப்பு மற்றும் சுற்றுலாத்துறை விவகார அமைச்சர்,<br>வடமேல் மாகாணம்.

குருநாகல்,<br>*2016, சனவரி 12.*

**கட்டளை**

1. இந்தக் கட்டளையானது வடமேல் மாகாணத்தின் சிலாபம் நகர சபையில் 2016 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட ஆவணத்தை அமுல்படுத்துதல் தொடர்பான கட்டளை என எடுத்துக்காட்டப்படுகின்றது.

2. வடமேல் மாகாணத்தின் சிலாபம் நகர சபையின் பொருட்டு 2016 ஆம் ஆண்டிற்கு ஏற்புடைய வரவு செலவுத்திட்ட ஆவணம் நகர சபை கட்டளைச் சட்டத்தின் (255 ஆம் அத்தியாயம்) 178 ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் நிறைவேற்றப்படாதவிடத்து, இயைபான நகர சபையினால் 2016 ஆம் ஆண்டு பொருட்டு தயாரிக்கப்பட்ட வரைவு வரவு செலவுத்திட்ட ஆவணம் இயைபான நகர சபை அமைந்துள்ள வடமேல் மாகாணத்தின் உள்ளூராட்சி ஆணையாளரின் அங்கீகாரத்தின் கீழ் குறித்த நகர சபையினால் 2016 ஆம் ஆண்டு பொருட்டு அமுல்படுத்துதல் சட்டப்பூர்வமானதாகும்.

3. இந்தக் கட்டளை 2016.01.01 ஆந் திகதி முதல் அமுல்படுத்தப்படுதல் வேண்டும்.

*1- 1067*



இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.